**சுருக்கம்**

செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம் - 2020-2021-ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை அறிவிப்பு - தூயதமிழ்ப் பற்றாளர் விருது, தூய தமிழ் ஊடக விருது மற்றும் நற்றமிழ்ப் பாவலர் விருதுகளுக்காக வெற்றியாளர்களை தெரிவு செய்து, விருது வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (தவ2-2)த் துறை

அரசாணை (ப) எண். 33

நாள் 26.02.2021
சார்வரி, மாசி- 14
திருவள்ளுவர் ஆண்டு – 2052

படிக்கப்பட்டவை:-

1. அரசாணை (நிலை) எண்.129, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (தவ 2-2)த் துறை, நாள்: 30.12.2020.
2. அரசாணை (நிலை)எண்.130, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (தவ 2-2)த் துறை, நாள்: 30.12.2020.
3. அரசாணை (நிலை) எண்.131, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (தவ2-2)த் துறை, நாள்: 30.12. 2020.

படிக்க:

4. செந்தமிழ் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்குநரின் கடித எண்.372/2020, நாள் 22.02.2021.

*******

ஆணை:-

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், பிறமொழிக் கலப்பில்லாமல் தூய தமிழில் பேசுவோரைப் பாராட்டும் வகையில் மாவட்டத்திற்கு ஒருவர் வீதம் 37 பேருக்குத் "தூயதமிழ்ப் பற்றாளர் விருது" வழங்க அனுமதி அளித்தும், அதற்கு ரூ.7.40 இலட்சம் நிதி ஒதுக்கீடு அளித்தும் ஆணையிடப்பட்டது. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், தூய தமிழைப் பயன்படுத்தும் ஊடகங்களை ஊக்குவிக்கும் வகையில் ஒரு காட்சி ஊடகம் மற்றும் ஒரு அச்சு ஊடகத்திற்குத் “தூயதமிழ் ஊடக விருது" வழங்குவதற்கு அனுமதி அளித்தும், அதற்கு ரூ.1.50 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்தும் ஆணையிடப்பட்டது. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், பிற மொழிக் கலப்பில்லாத தூய தமிழ்ச் சொற்களையும் புதிய தமிழ்க் கலைச்சொற்களையும் பயன்படுத்தும் பாவலர்களை ஊக்குவிக்கும் வகையில் இருவருக்கு (மரபுக் கவிதை, புதுக்கவிதை) “நற்றமிழ்ப் பாவலர் விருது" வழங்க அனுமதி அளித்தும், அதற்கு ரூ.1.50 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்தும் ஆணையிடப்பட்டது.

(த.பி.பா)

2. மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், மேலே முதலாவதாக, இரண்டாவதாக மற்றும் மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணைகளின்படி, தூயதமிழ்ப் பற்றாளர் விருது-37, தூயதமிழ் ஊடக விருது-2 நற்றமிழ்ப் பாவலர் விருது-2, ஆகியவற்றிற்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டு, பெறப்பட்ட விண்ணப்பங்கள் இயக்கக நிலையில் ஆய்வு செய்யப்பட்டு தகுதியான விண்ணப்பங்கள் மட்டும் போட்டிக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டு, அந்த விண்ணப்பங்களுக்குரியோரிலிருந்து அந்தந்த விருதுக்குரிய நடுவர் குழு வழங்கிய மதிப்பெண்களின் அடிப்படையில் விருதுபெறத் தகுதியானவர்களாகக் கருதத்தக்கோர் பட்டியல் இயக்கக நிலையில் அணியமாக்கப்பட்டு, அவற்றின் விவரங்கள் அனுப்பப்பட்டுள்ளதாகவும், தூயதமிழ்ப் பற்றாளர் விருதுக்காக நீலகிரி மற்றும் நாமக்கல் மாவட்டத்திலிருந்து விண்ணப்பங்கள் ஏதும் வரப்பெறவில்லை என்றும், புதியதாக உருவாக்கப்பட்ட மயிலாடுதுறை மாவட்டத்திலிருந்து விண்ணப்பங்கள் வரப்பெற்று, அம்மாவட்டத்திலிருந்து விருதாளர் தேர்ந்தெடுக்கப்பட்டு, அதன்படி மொத்தம் 36 மாவட்டங்களிலிருந்து விருதாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாகவும் அகரமுதலித் திட்ட இயக்குநர் தெரிவித்துள்ளார்.

3. அரசின் கவனமான பரிசீலனைக்குப் பின்னர், செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்குநரின் கருத்துவின் அடிப்படையில், 2020-ஆம் ஆண்டிற்கான தூயதமிழ்ப் பற்றாளர் விருது, தூயதமிழ் ஊடக விருது மற்றும் நற்றமிழ்ப் பாவலர் விருது, ஆகிய விருதுகளுக்கு அந்தந்த விருதுகளுக்குரிய நடுவர் குழு வழங்கிய மதிப்பெண்களின் அடிப்படையில் இணைப்பில் குறிப்பிட்டுள்ளவாறு அதிக மதிப்பெண் பெற்றவர்களுக்கு விருதுகளை வழங்கலாம் என முடிவு செய்து அவ்வாறே அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

மகேசன் காசிராஜன்,
அரசு செயலாளர்.

பெறுநர்
இயக்குநர்,
செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்ககம், சென்னை.
சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை-1.
மாநிலக் கணக்காய்வுத் தலைவர், சென்னை-9/18.
நகல்:
மாண்புமிகு அமைச்சர் (தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாடு)
அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
செயலாளர் அவர்களின் முதன்மை தனிச்செயலர்,
தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை, சென்னை-9.
நிதி (தவ(ம)செ.)த் துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.

27/2/2021

**அரசாணை (ப) எண்.33, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (த.வ.2-2)த் துறை, நாள் 26.02.2021-இன் இணைப்பு-1**

தூயதமிழ்ப் பற்றாளர் விருது -2020

| வ. எண் | மாவட்டம் | விருதாளர்கள் (விருதுத் தொகை ரூ.20,000/-) |
|---|---|---|
| 1 | அரியலூர் | திரு. அ. சிவபெருமான் |
| 2 | செங்கல்பட்டு | முனைவர் சு. சதாசிவம் |
| 3 | சென்னை | முனைவர் சி. முத்துமாலை |
| 4 | கடலூர் | பாண்டலம் புலவர் க. குணசேகரன் |
| 5 | தருமபுரி | திரு. த. தங்கமுத்து |
| 6 | திண்டுக்கல் | முனைவர் ந. அறிவரசன் |
| 7 | ஈரோடு | திரு. உ. கந்தசாமி |
| 8 | கள்ளக்குறிச்சி | திரு. இ. நேரு |
| 9 | காஞ்சிபுரம் | பாவலர் மா. வரதராசன் |
| 10 | கன்னியாகுமரி | செல்வி பி. வைஷ்ணா |
| 11 | கரூர் | பாவலர் ப. எழில்வாணன் |
| 12 | கோயம்புத்தூர் | முனைவர் அ. ஷர்மிளாபானு |
| 13 | கிருட்டினகிரி | திரு. கருமலைத்தமிழாழன் (எ) கி. நரேந்திரன் |
| 14 | மதுரை | திரு. வ. வரதராஜன் |
| 15 | மயிலாடுதுறை | முனைவர் ஞானம் (எ) நா. ஞானசேகரன் |
| 16 | நாகப்பட்டினம் | திரு. கோவி. இராசேந்திரன் |
| 17 | பெரம்பலூர் | திரு. கௌதமன்நீல்ராசு |
| 18 | புதுக்கோட்டை | முனைவர் வே. அழகுமுத்து |
| 19 | இராமநாதபுரம் | கவிஞர் கு. அழகர்சாமி |
| 20 | இராணிப்பேட்டை | திரு. த. பழனி |
| 21 | சேலம் | திரு. இர. மோகன்குமார் |
| 22 | சிவகங்கை | செல்வி க. ஆஷா |
| 23 | தஞ்சாவூர் | திரு. தனியெழிலன் (எ) சதீஷ் |

| | | |
|---|---|---|
| 24 | தேனி | செல்வி தி. இராஜபிரபா |
| 25 | தென்காசி | திரு. க. கருப்பசாமி |
| 26 | திருப்பத்தூர் | திரு. சு. கதிர்வேல் |
| 27 | திருப்பூர் | செல்வி ச. காவியா |
| 28 | திருவள்ளூர் | திரு. மே. மு. மணிமாறன் |
| 29 | திருவண்ணாமலை | திரு. செ. உதயணன் (எ) எழுஞாயிறு |
| 30 | திருவாரூர் | திரு. இராம. வேல்முருகன் |
| 31 | திருநெல்வேலி | திரு. பே. இராசேந்திரன் |
| 32 | திருச்சிராப்பள்ளி | முனைவர் தி. வெ. இராசேந்திரன் |
| 33 | தூத்துக்குடி | திருமதி தி. உமாதேவி |
| 34 | வேலூர் | திரு. வி. பத்மநாபன் (எ) வே. பதுமனார் |
| 35 | விழுப்புரம் | திரு. செ. அழகுவேல் (எ) அழகர் |
| 36 | விருதுநகர் | திரு. முத்துவிக்னேஷ். க |

மகேசன் காசிராஜன்,
அரசு செயலாளர்.

// உண்மை நகல் //

க. [signature] 27/2/21
பிரிவு அலுவலர்.

[signature] 27/2/2021

**அரசாணை (ப) எண்.33, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (த.வ.2-2)த் துறை, நாள் 26.02.2021-இன் இணைப்பு-2**

தூய தமிழ் ஊடக விருது-2020

(விருதுத் தொகை ரூ.50,000/-, தங்கப் பதக்கம் மற்றும் தகுதியுரை)

**அச்சு ஊடகம்**

| வ.எண். | ஊடகத்தின் பெயர் |
|---|---|
| 1 | வெல்லும் தூயதமிழ் - மாத இதழ் |

**காட்சி ஊடகம்**

| வ.எண். | ஊடகத்தின் பெயர் |
|---|---|
| 1 | மக்கள் தொலைக்காட்சி |

மகேசன் காசிராஜன்,
அரசு செயலாளர்.

// உண்மை நகல் //

பிரிவு அலுவலர்.

**அரசாணை (ப) எண்.33, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (த.வ.2-2)த் துறை, நாள் 26.02.2021-இன் இணைப்பு-3**

நற்றமிழ்ப் பாவலர் விருது-2020

(விருதுத் தொகை ரூ.50,000/-, தங்கப் பதக்கம் மற்றும் தகுதியுரை)

**மரபுக் கவிதை**

| வ.எண். | பெயர் | ஆய்வுக்குரிய நூல் |
|---|---|---|
| 1 | திரு. மறத்தமிழ்வேந்தன் | இளந்தமிழராற்றுப்படை |

**புதுக் கவிதை**

| வ.எண். | பெயர் | ஆய்வுக்குரிய நூல் |
|---|---|---|
| 1 | திரு. சந்திரா மனோகரன் | அசையும் இருள் |

மகேசன் காசிராஜன்,
அரசு செயலாளர்.

// உண்மை நகல் //

பிரிவு அலுவலர்.

27/2/2021